# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

## OS. No. 30/2019 நாள்.26.02.2026

PW1- திரு. பழனிசாமி, த/பெ. திரு.செம்பு

1ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை

நான் எங்கு குடியிருக்கிறேன் என்றால் தஞ்சாவூர் டவுன் நாஞ்சிகோட்டை சாலையில் சாந்திநகரில் வசிக்கிறேன். நான் என்ன வேலை பார்த்தேன் என்றால் துணை வட்டாட்சியர் ஒய்வு பெற்றுவிட்டேன். என்னபரிகாரத்திற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் என் தாயின் தகப்பனார் இடும்மையயாவின் 3.4.1969 பதிவு செய்யபட்ட உயில் ஆவணத்தின்படி எனது தாயாருக்கு 412/6சியில் 21ஏர்ஸ்சில் எனது தாயாரின் பங்கான 10 1/2 ஏர்ஸ் மற்றும் சின்னம்மாவுக்கு 10 1/2 ஏர்ஸ் ஆக 21 ஏர்ஸ் கேட்டு அதன் அடிப்படையில் எனது அம்மாவும், சின்னம்மாவும் எனக்கு மற்றும் அவருடைய வாரிசுகளுக்கு உயிலின் மூலம் கொடுத்துளளார்கள் அதனால் தாவா தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.1 தான் எனது தாத்தா எழுதி வைத்த உயிலா என்றால் ஆமாம். அந்த உயிலில் 412/6சி என்று உள்ளதா என்றால் 412/6 என்று மொத்த விஸ்திரணம் சொல்லபட்டுள்ளது. வா.சா.ஆ.3 என் அம்மா எழுதி வைத்த உயிலா என்றால் ஆமாம். அதில் கண்ட சொத்துக்கள் எப்படி கிடைத்தது என்று எழுதி வைத்துள்ளார் என்றால் எனது சாமியம்மாள் வழியில் எனக்கு கிடைத்தது என்று உள்ளது. வா.சா.ஆ.3 ன் படி எனது தாத்தா வகை உரிமையில்லை என்றால் நான்கு அயிட்டம் உள்ளது அதில் ஒரு அயிட்டம் சாமியம்மாள் வகை. தாவா சொத்து நான் எப்போது போய் பார்த்தேன் என்றால் 2.10.2018. அதற்கு முன்பு எப்போது பார்த்தேன் என்றால் வருடத்திற்கு ஒருமுறை போய் பார்த்தேன். நான் போய் பார்த்தபோது தாவா சொத்தில் மனையிருந்தது என்றால் இல்லை. 1988லேயே அந்த சொத்தில் மனை பிரிக்கபட்டுவிட்டது என்று சொன்னால் சரியல்ல. 412/6 இன் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 2ஏக்கர் 15செண்ட். அது யார் பெயரில் இருந்தது என்றால் என் தாத்தாவின் நான்கு அண்ணன் தம்பி பெயரில் இருந்தது. 412/6 அதற்கு முன்பு யார் பெயரில் இருந்தது என்றால் தெரியாது. நாதப்ப உடையார் பெயரில் இல்லை என்றால் தெரியாது. நாதப்பஉடையாருக்கு உரிமையில்லாததால் அவரை தொடர்ந்து எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. நாதப்பஉடையார் எப்போது இறந்தார் என்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.5 இல் சொத்துவிபரம் உள்ளதா என்றால் இல்லை. 1, 2,3, 4 பிரதிவாதிகள் பிளாட் வாங்கினவர் என்றால் ஆமாம். 5-11 பிரதிவாதிகள் யார் என்றால் அவர்கள் எல்லோரும் மனை உற்பத்தி செய்தவரின் வாரிசுகள் கிராம பஞ்சாயத்து தலைவரின் வாரிசுகள். மனை

உற்பத்தி செய்தவர் யார் என்றால் ஜோதிராமன். ஜோதிராமன் பவர் ஏஜென்டா என்றால் ஆமாம். பவர் ஏஜென்ட் செய்யும் முதல்வரை கட்டுப்படுத்தும் என்றால் ஆமாம். அந்த முதல்வரை இந்த வழக்கில் சேர்த்துள்ளேனா என்றால் அவர் இறந்துவிட்டார் அதனால் சேர்க்கவில்லை. ஊராட்சி மன்ற தலைவர் அலுவல்பணியால் கையெழுத்து போட்டுள்ளார் என்றால் ஆமாம். காமாட்சி நகர் லேவுட் முறைப்படி பஞ்சாயத்து அனுமதி பெற்றது என்றால் ஒருபகுதி நிலஉரிமையாளரிடம் அனுமதி வாங்கவில்லை. எவ்வளவு இடம் ஆக்கிரமிப்பு செய்துள்ளார் என்றால் ஆக்கிரமிப்பு யாரும் செய்யவில்லை. ஆக்கிரமிப்பு செய்ய முயற்சி செய்ததாக சொல்வது உண்மையல்ல என்றால் சரியல்ல. போலிஸாரிடம் புகார் கொடுத்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன். ஆவணமாக தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அந்த இடம் தற்போது எப்படி உள்ளது என்றால் மனைகட்டாக உள்ளது. 1988லிருந்து பிரதிவாதிகள் வேலி போட்டு கொட்டகை போட்டு அனுபவம் செய்கிறார் என்றால் சரியல்ல. 4ஆம் பிரதிவாதி எனக்கு எதிராக வழக்கு போட்டுள்ளாரா என்றால் போட்டுள்ளார். அந்த வழக்கு எந்த தேதியில் போட்டார் என்றால் 2018இல் போட்டார். 412/6பியில் எனக்கு எந்த சொத்தும் இல்லை என்றால் ஆமாம். வழக்கு 1ஆம் பிரதிவாதியை பொறுத்து தள்ளுபடி செய்ப்படவேண்டியது என்றால் சரியல்ல.

<u>4ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

தாவா சொத்தின் விஸ்தீரணம் 2.15 என்று சொல்லியுள்ளேன் என்றும் வழக்குரையில் 2.33 போட்டுள்ளேன் என்றால் ஆமாம். என்னுடைய பாக வீதம் என்பது 53 3/4 சென்ட் என்றால் ஆமாம். நாதப்பஉடையாருக்கு சாமிய்யா, கருப்பையா என்கிற கட்டையா, ஆனைய்யா, இடும்பைய்யா என்கிற ஆண் வாரிசும், தனவேல் என்கிற பெண் வாரிசும் உள்ளார்கள் என்றால் ஆமாம். 2.33இல் எல்லோருக்கும் 1/4 வீதம் என்றால் ஆமாம்.அதில் 18சென்ட் மற்றொருவர் பெயரில் உள்ளது. இடும்பைய்யாவுக்கு தங்கபொண்ணு, சுப்பம்மாள் என்ற வாரிசுகள் என்றால் ஆமாம். கருப்பையா என்கிற கட்டையாவுக்கு சரஸ்வதியம்மாள், காசியம்மாள் வாரிசு என்றால் ஆமாம். சரஸ்வதியம்மாள், காசியம்மாள் அவர்கள் ஜோதிராமனுக்கு பவர் பத்திரம் எழுதி கொடுத்துள்ளார்கள் என்றால் ஆமாம். அந்த பவர் பத்திரத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. ஜோதிராமனின் வாரிசுகளை எதற்காக சேர்த்தேன் என்றால் 412/6சி-ஐ எங்களுக்கு உரிமையுடையதை சேர்த்து கிரையம் செய்துவிட்டார். எதன் அடிப்படையில் அவர் விற்றார் என்றால் உட்பிரிவு ஆகாததது போல் காண்பித்து விற்றுவிட்டார். காசியம்மாள் 16.7.1987இல் புல எண் 412/6இல் 2.33 .0இல் அவருடைய பாகவீதம் 29 சென்ட் பொறுத்து பொதுஅதிகார ஆவணம் எழுதி கொடுத்துள்ளார் என்றால் ஆமாம். அதேபோல் சரஸ்வதியம்மாள் 24.3.1988இல்

புல எண் 412/6இல் 2.33 .0இல் அவருடைய பாகவீதம் 25 1/4 சென்ட்டில் 15 சென்ட் பொறுத்து பொதுஅதிகார ஆவணம் எழுதி கொடுத்துள்ளார் என்றால் ஆமாம். இந்த இரண்டு இடங்களை பொறுத்துதான் மனைபிரிவு பிரிக்கபட்டது என்றால் ஆமாம். 4ஆம் பிரதிவாதி மனை எண் 59 வாங்கியுள்ளார் என்றால் தெரியாது. 4ஆம் பிரதிவாதி மருத்துவகல்லூரி காவல்நிலையத்தில் 2.10.2018 இல் என் மீது புகார் கொடுத்தார் என்றால் ஆமாம். 3ஆம் பிரதிவாதி எப்போது சொத்து வாங்கினார் என்றால் தெரியாது. 15.7.1992இல் கிரையம் வாங்கினார் என்று சொன்னால் ஆமாம். அந்த விபரம் எனக்கு எப்போது தெரியும் என்றால் 2.10.2018 க்கு பிறகு தெரியும். 412/6 உதயகுமாரி பெயரில் பட்டா மாறியது எப்போது தெரியும் என்றால் 2014இல் தெரியும். பட்டா ரத்து செய்யவேண்டும் என்று நடவடிக்கை எடுத்தேனா என்றால் தகவல்கோரும் மனு கொடுத்தேன் பதில் சொல்லிவிட்டார்கள். மனு கொடுத்து ரத்து செய்த உத்தரவு தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. மாவட்ட வருவாய் அலுவலரின் உத்தரவின்பேரில் கிராம வருவாய் கணக்கில் உதயகுமாரி பெயர் ந.க எண் 426/2011/ஆ5/நாள் 15.2.2013 ன் படி நீக்கபட்டதாக குறிப்பு உள்ளது என்றால் என்னிடம் காண்பிக்கும் ஆவணத்தில் அப்படிதான் உள்ளது. 412/6என்பது உட்பிரிவாகி 412/6சி யாக உள்ளது என்றால் ஆமாம். 4ஆம் பிரதிவாதி கிரையம் வாங்கிய சொத்து காசியம்மாள், சரஸ்வதியம்மாளுக்கு சொந்தமானது என்றால் இல்லை. நாதப்ப உடையார் வாரிசு என்ற வகையில் எனக்கு 1/4 கிடைத்ததுபோல் காசியம்மாள், சரஸ்வதியம்மாளுக்கு 1/4 கிடைத்துள்ளது என்றால் ஆமாம். அதன் அடிப்படையில் 3ஆம் பிரதிவாதிக்கு விற்கபட்டு அவரிடமிருந்து 4ஆம் பிரதிவாதி கிரையம் வாங்கியுள்ளார் என்றால் புலஎண் மாறியுள்ளது. தாவா சொத்தை உதயகுமாரி 1992இல் கிரையம் வாங்கிவிட்டார் என்றும் அந்த விபரம் எனக்கு தெரியும் என்றும் தற்போது வழக்கிற்காக தெரியும் சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்குமூலம் வழக்குரையில் சொன்னவாறு ஏற்படவில்லை என்றால் சரியல்ல. 4ஆம் பிரதிவாதி வாங்கிய சொத்து காசியம்மாள் சரஸ்வதியம்மாளுக்குதான் சொந்தம் என்றும், 4ஆம் பிரதிவாதி அதைதான் வாங்கினார் என்றும் அது என்னுடைய சொத்து அல்ல என்றும் சொன்னால் சரியல்ல. நான் தாக்கல்செய்துள்ள உயில்கள் எனக்கு பாத்தியப்பட்ட 1/4 பாகத்தை பொறுத்தது என்றால் ஆமாம். அந்த ஆவணங்களுக்கும் 4ஆம் பிரதிவாதி கிரையம் பெற்ற சொத்துக்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. தாவா தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. சரஸ்வதியம்மாள், காசியம்மாள் வாரிசுகளை சேர்க்காத காரணத்தினால் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

12 முதல் 15 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை

12 முதல் 15 பிரதிவாதிகளுக்கு எதிராக அலுவல் ரீதியாக புகாரும் குற்றசாட்டும் சொல்லவில்லை என்றால் ஆமாம். வழக்கில் 12 முதல் 15 பிரதிவாதிகள் தேவையற்ற தரப்பினர் என்றால் சரியல்ல. என்னுடைய பிராதில் நான் கோரியுள்ள 14ஆம் பிரதிவாதிக்கு எதிரான செயலுறுத்து கட்டளை பரிகாரம் கிடைக்ககூடியதல்ல என்றால் சரியல்ல. தேவையற்ற நபரை சேர்த்த காரணத்திற்கு வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**நான் சொல்ல என் உத்திரவுப்படி தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.**

NAGARAJAN Digitally signed by NAGARAJAN Date: 2026.02.26 18:39:26 +0530

**2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, தஞ்சாவூர்.**